

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (13.7.2024) முகாம் அலுவலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதையொட்டி சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (13.7.2024) அவரது இல்லத்தில், மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் அவர்களின் மகன் கோ.ப. அன்பழகன் அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகன் அ.ஆ.அகத்தியன் – டாக்டர் எஸ்.ஷாலினி ஆகிய புதுமணத் தம்பதியருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## கழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க வெற்றி!

# சாதனை வெற்றியை வழங்கிய தொகுதி மக்களுக்கும் - உழைத்த அனைவருக்கும் நன்றி!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, ஜூலை 15-**

**“விக்கிரவாண்டி தொகுதியில் சாதனை வெற்றியை வழங்கிய தொகுதி மக்களுக்கும் உழைத்த அனைவருக்கும் நன்றி” என்று, கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:-

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மகத்தான மாபெரும் வெற்றியை வழங்கிய விக்கிரவாண்டி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நாம் பெற்ற – நாற்பதுக்கு நாற்பது!**
**சாதாரண வெற்றி அல்ல!**

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட தமிழ்நாட்டின் நாற்பது தொகுதியிலும் “நாற்பதுக்கு நாற்பது” என்ற நூறு விழுக்காடு வெற்றியை திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி பெற்றது. சாதாரண வெற்றியல்ல, பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றியைப் பெற்றோம். அ.தி.மு.க. கூட்டணி படுதோல்வியை அடைந்தது. பா.ஜ.க. கூட்டணி, பாதாளத்தில் விழுந்தது. இதைத் தொடர்ந்து, விக்கிரவாண்டி இடைத்தேர்தலை எதிர்கொண்டோம்.

விக்கிரவாண்டித் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய புகழேந்தி அவர்கள் உடல்நிலை காரணமாக மறைவெய்தியதைத் தொடர்ந்து இடைத்தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வேட்பாளராக ஆற்றல்மிகு உடன்பிறப்பு அன்னியூர் சிவாவை வேட்பாளராக அறிவித்தோம்.

நாடாளுமன்றத் தேர்தல் படுதோல்வியில் எழ முடியாமல் இருந்த அ.தி.மு.க., விக்கிரவாண்டி இடைத்தேர்தலிலும் அதே படுதோல்வியைச் சந்திக்கத்தான் போகிறோம் என்பதை உணர்ந்து போட்டியில் இருந்து பின்வாங்கியது. பா.ஜ.க., தனது அணியில் இருக்கும் பா.ம.க.வை நிறுத்தியது. ‘இடைத்தேர்தலிலேயே நிற்பது இல்லை’ என்று வைராக்கியமாக இருந்த பா.ம.க., விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிட முன் வந்த மர்மம் இன்னமும் விலகவில்லை.



**பொய் வேஷக்காரர்களின் – பகல் வேஷப் பரப்புரைகள்!**

தோற்கப் போகிறோம் என்று தெரிந்தே போட்டியிட்டது பா.ஜ.க. அணி. அவதூறுகளையும், பொய்களையும் தி.மு.க. மீதும் குறிப்பாக என் மீதும் விதைத்து, தங்களது 100 விழுக்காடு தோல்வியை மறைப்பதற்காக மிகக் கீழ்த்தரமான பரப்புரையை பா.ஜ.க. அணி செய்தது. பொய்வேஷக்காரர்களின் பகல் வேஷப் பரப்புரையை, மக்கள் மதிக்கவே இல்லை. இந்த வீணர்களை விக்கிரவாண்டி மக்கள் விரட்டியடித்து விட்டார்கள்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் முன்னேற்றத்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகமே என்றும் எப்போதும் தேவை என்பதை இந்த இடைத்தேர்தலின் மூலமாக எடைபோட்டுச் சொன்ன விக்கிர வாண்டி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேரம்காலம் பார்க்காமல் உழைத்த உழைப்புக்கும், தினந்தோறும் உருவாக்கிக் கொடுத்த திட்டங்களுக்கும் மக்கள் தெரிவித்த நன்றியின் அடையாளமாகவே இந்த வெற்றியை நான் பார்க்கிறேன்.

**அமைச்சர்கள் –**
**மாவட்டச் செயலாளர்களுக்கு நன்றி!**

திராவிட முன்னேற்றக் கழக ஆற்றல்மிகு வேட்பாளர் அன்னியூர் சிவாவை வெற்றி பெற வைக்க பொறுப்பேற்றுக் கொண்ட கழக துணைப் பொதுச்செயலாளர் அமைச்சர் க.பொன்முடி - கழகக் கொள்கை பரப்புச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் தலைமையில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் களம் கண்டார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் என பலரும் களப்பணி ஆற்றினார்கள்.

**கண்துஞ்சாது உழைத்த -**
**கழகத்தினருக்கு நன்றி!**

பொதுச்செயலாளர் அண்ணன் துரைமுருகன், இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி உள்ளிட்ட முன்னணியினர் பலரும் தேர்தல் பரப்புரை செய்தார்கள். நமது இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள், தொடர்ந்து பரப்புரையில் ஈடுபட்டார்கள். இந்தியா கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் – உடன்பிறப்புகளும் தோழமைக் கட்சித் தோழர்களும், உதயசூரியனின் வெற்றிக்கு இரவு பகல் பாராது கண்துஞ்சாது உழைத்த அனைவருக்கும் எத்தனை முறை நன்றி சொன்னாலும் தகும்.

**மொத்த வாக்கு விபரம்**

| | |
|---|---|
| அன்னியூர் சிவா (தி.மு.க.) | 1,24,053 |
| சி.அன்புமணி (பா.ம.க.) | 56,296 |
| அபிநயா (நா.த.க.) | 10,602 |

கழக வேட்பாளர் அன்னியூர் சிவா 67,757 வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றார்.

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பொன். கௌதமசிகாமணி உள்ளிட்ட ஒன்றுபட்ட விழுப்புரம் மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தோல்விகளிலிருந்து பா.ஜ.க.**
**பாடம் கற்க வேண்டும்!**

இதே நேரத்தில் இந்தியா முழுமைக்கும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற 13 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணிக் கட்சிகள் 11 இடங்களில் முன்னணியில் இருக்கிறது. பாஜக தோல்வியைத் தழுவி இருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையைப் பெறாத கட்சி தான் பா.ஜ.க. இறங்கி வந்து சில கட்சிகளின் தயவால் ஒன்றியத்தில் ஆட்சி அமைத்துள்ளது பா.ஜ.க. அத்தகைய தோல்வி முகமே பா.ஜ.க.வுக்கு இந்த இடைத்தேர்தலிலும் தொடர்கிறது. தோல்விகளில் இருந்து பா.ஜ.க. பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். மாநில உணர்வுகளை மதிக்காமல் ஆட்சியையும் கட்சியையும் நடத்த முடியாது என்பதை பா.ஜ.க. இனியாவது உணர வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 2019 ஆம் ஆண்டு முதல் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியின் வெற்றி தொடர்கிறது.

தி.மு.க. கழக வரலாற்றின் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க வெற்றியாக விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வெற்றியும் அமைந்துள்ளது. இந்த வெற்றியானது எங்களுக்கு மாபெரும் உற்சாகத்தையும், எழுச்சியையும், அதேசமயத்தில் கூடுதல் பொறுப்பையும் கொடுத்திருக்கிறது.

**கழக அரசின் சாதனைகளுக்கு**
**மகுடம் சூட்டும் வெற்றி!**

நாள்தோறும் நல்ல பல திட்டங்கள் என சாதனைகள் செய்து வரும் நமது கழக அரசின் சாதனைகளுக்கு மகுடம் சூட்டுவதாக, சாதனை வெற்றியாக இது அமைந்துள்ளது.

நாங்கள் எங்களது சாதனைப் பயணத்தையும் வெற்றிப் பயணத்தையும் தொடர்கிறோம்.

மக்களோடு இருக்கிறோம்.

மக்கள் எங்களோடு இருக்கிறார்கள்.

இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் கழக வேட்பாளர்

# அன்னியூர் சிவா மாபெரும் வெற்றி - அனைவருக்கும் நன்றி!

### விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

*விழுப்புரம், ஜூலை 15-*

விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் மக்கள் பணிகளால் ஈர்க்கப்பட்டு, அவருடைய திராவிட மாடல் மூன்றாண்டு கால சிறப்பான ஆட்சிக்கு விக்கிர வாண்டி தொகுதியில் மாபெரும் வெற்றியை மக்கள் பரிசாக தந்துள்ளார்கள்.

திராவிட மாடல் ஆட்சி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும், சூறாவளி பிரச்சாரம் மேற்கொண்ட, இளைஞர்களை ஈட்டி முனைகளாக தீட்டி வரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், விக்கிரவாண்டி தொகுதி பொறுப்பாளர்கள் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். க. பொன்முடி, கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ் ஜெகத்ரட்சகன் எம்.பி., பொறுப்பு அமைச்சர்களான காணை மத்திய ஒன்றியம் கே.என்.நேரு, காணை வடக்கு ஒன்றியம் எ.வ.வேலு அவர்களுக்கும், கோலியனூர் மேற்கு ஒன்றியம்



ஐ.பெரியசாமி, அர . சக்கரபாணி, காணை தெற்கு அன்பில் மகேஷ் பொய்யாமொழி, விக்கிர வாண்டி கிழக்கு எம். ஆர்.கே. பன்னீர்செல்வம், விக்கிரவாண்டி மேற்கு தா.மோ.அன்பரசன், விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் எஸ்.எஸ். சிவசங்கர், விக்கிர வாண்டி பேரூர் சி. வெ.கணேசன் மற்றும் தேர்தல் பணியாற்றிய அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற , நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், இந்தியா கூட்டணி மற்றும் திமுக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர , பேரூர் கழக நிர்வாகிகளுக்கும், நமது அன்னியூர் சிவா அவர்களை 67757 வாக்குகள் வித்தியாசத்தில் வாக்களித்து வெற்றிபெற வைத்த பொதுமக்களுக்கும் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் என்ற முறையில் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### குற்றாலத்தில்

# தொடர் மழையால் நீர்வரத்து அதிகரிப்பு!

### சுற்றுலா பயணிகள் குளிக்க தடை!

நெல்லை, ஜூலை 15–

குற்றாலத்தில் கடந்த வாரம் சாரல் நன்றாக பெய்த நிலையில், 2 நாட்களாக வெயில் அடித்தது. நேற்று மதியம் வரை நல்ல வெயில் காணப்பட்டது.

மதியத்திற்கு பிறகு வெயில் மறைந்து திடீரென மேக கூட்டம் திரண்டு காணப்பட்டது. மாலையில் சாரல் பெய்தது. மேற்குத் தொடர்ச்சி மலை, குற்றாலம், தென்காசி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று மாலைக்கு பிறகு சாரல் பெய்தது. இதனால் அனைத்து அருவிகளில் தண்ணீர் நன்றாக விழுந்தது. புலியருவி, சிற்றருவிகளில் தண்ணீர் நன்றாக விழுந்தது.

இந்நிலையில் தொடர் மழையால் நேற்றிரவு மெயினருவி, ஐந்தருவி, பழைய குற்றாலத்தில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதையடுத்து பாதுகாப்பு கருதி மெயினருவி, ஐந்தருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க போலீசார் தடை விதித்தனர். இதனால் சுற்றுலா பயணிகள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

பழைய குற்றாலத்தில் இரவு நேரத்தில் குளிக்க அனுமதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் உள்ள அரசு ஈரோடு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 2018 – 2019ம் கல்வியாண்டில் சேர்ந்து பயின்று கல்வியை முடித்துள்ள மாணவ, மாணவியர்களுக்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பட்டங்களை வழங்கி, சிறப்புரையாற்றினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, அரசு ஈரோடு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு.செந்தில்குமார், மருத்துவ கண்காணிப்பாளர் மரு.செந்தில் செங்கோடன், உறைவிட மருத்துவர் பி.டி.ராணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.